1994 நவம்பர் 7]

அந்த உணர்வுகளை எண்ணி உடனடியாக ஒரு பணிமனையை அங்கே துவக்க முன்வருவாரா ; பணிமனையை அமைத்துத்தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பணிமனையை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 25 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஆகவேதான், 6 பேருந்துகள் இயக்கப்படுகிறபோது, அது தேவையில்லை என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு, கூடுதல் எண்ணிக்கையுள்ள பேருந்துகள் அங்கு விடுகிறபோது, அந்த எண்ணிக்கை 25-ஐத் தாண்டுகிறபோது, அங்கே பணிமனை அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 27, திருமதி கே. எம். கலைச்செல்வி, இருக்கையில் இல்லை.

வினா எண் 28, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

28—

சேலத்தில் ரெடிமேட் ஆடை ஏற்றுமதி மையம் ஏற்படுத்துதல்

24026–திரு. கே. **கந்தசாமி :*

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் ரெடிமேட் ஆடை ஏற்றுமதி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளிலிருந்து ரெடிமேட்

ஆடைகள், வெளிநாடுகளுக்குப் பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சேலத்தில் தயாரிக்கப்படும் ஆடைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது. சேலத்தில் உள்ள ரெடிமேட் ஆடை தயாரிப்பாளர்கள் பம்பாயிலுள்ள தனியார் வியாபாரிகள் மூலம் ஏற்றுமதி செய்கிறார்கள். எனவே, சேலத்திலுள்ள வியாபாரிகளே நேரடியாக அவற்றை ஏற்றுமதி செய்ய, அரசு வசதி செய்து கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் நகருக்கு அருகாமையில் திருப்பூர் உள்ளது. தற்போது, திருப்பூர் நகரம் ரெடிமேட் ஆடைகளை ஏற்றுமதி செய்யும் ஒரு சிறந்த மையம் என்ற தகுதியினைப் பெற்று, பின்னலாடை மற்றும் ரெடிமேட் ஆடைகள் ஏற்றுமதியை சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் உயர்த்தி, நமது நாட்டின் அன்னியச் செலாவணியையும் உயர்த்தி வருகிறது. தற்போது, தமிழக அரசின் சார்பில், நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், 'டாசிட்' மூலமாக, திருப்பூரில் அதற்கான அனைத்து வசதிகளையும் செய்து வருகிற காரணத்தினால், சேலத்திற்கு அருகாமையில் இருக்கிற திருப்பூர் மையம் மூலமாக ஏற்றுமதியை மேற்கொள்ளலாம் என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் அருகிலுள்ள வீரபாண்டியில், இந்த மாதிரி ஒரு ஏற்றுமதி ஆடை வளாகம் கட்டுவதற்கு, தமிழக அரசு முயற்சி செய்வதாகப் பத்திரிகையில் செய்தியைப் பார்த்தேன். அந்த மாதிரி ஏதேனும் முயற்சி தமிழக அரசின் வசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை; எதிர்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்.

முற்பகல் 10-30

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு ஆங்கில நாளேடுகளில் சேலத்திற்கு ஒரு மையம் வருவதாகச் செய்தி வந்திருந்தது. அது

1994 நவம்பர் 7]

அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருப்பதாகவும், சேலத்திலிருந்துதான் தமிழகத்திலேயிருந்து அதிகப்படியான துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும் கணக்கெடுப்பதிலேயிருந்து கிடைத்திருக்கிற தகவலின் அடிப்படையிலே சேலத்திலே ஒரு மையம் ஏற்படுத்தினால்தான் கன்டைனர் வசதியெல்லாம் கிடைக்கும் என்ற ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தினால் அது விரைவில் வரும் என்று பத்திரிகையிலே செய்தி வந்தது. அமைச்சர் அவர்களுடைய பதில் அதற்கு மாறாக இருக்கிறது. தற்போது சேலத்திலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய துணி வகைகளுக்கும், திருப்பூரிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய துணிவகைகளுக்கும் வேறுபாடு உள்ளது. எனவே, சேலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற இந்த மாறுபட்ட துணி வகைகளுக்கு என்று தனிப்பட்ட முறையிலே ஒரு மையம் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாசிட் மூலமாகத் தற்போது திருப்பூர் நகரில் அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதற்குத் தற்போது சாத்தியக்கூறு இல்லையென்றுதான் கூறினேன். பின்னர் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் தற்போது நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே மாநகராட்சி ஆக்கப்பட்டிருக்கிறது. சேலத்திலே ரெடிமேட் ஆடைகளை நிறைய சிறிய, சிறிய தொழிலதிபர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். திருப்பூருக்கும், சேலத்திற்கும் 60, 70 கி.மீ. தூரம் உள்ளது. திருப்பூரிலே வேறுபட்ட ரகங்கள் நெய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நல்ல நேரத்திலே, சேலத்திலே ஏற்றுமதி ஆடை உற்பத்தி செய்பவர்களுக்கு வசதியாக அரசாங்கமே அந்த ஏற்றுமதி செய்யும் திட்டத்தை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து அதற்குப் பின்னால் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலவகை ஏற்றுமதி ஆடைகளை ஏற்றுமதி செய்ய இங்கிலாந்தில் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி வந்துள்ளதே, அந்தத் தடை அகற்றப்பட்டுவிட்டதா? தடை விதிக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் தக்க பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 29, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

29—

கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் மூலம் வீடு கட்ட கடன் வழங்க நிபந்தனையை நீக்குதல்

23768*–திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் மூலமாக வீடு கட்ட கடன் பெறுவதற்கு மனுதாரர்களின் வீடுகளுக்கு கால்கோள் கட்டிடப் பணி நிறைவேறிய (Foundation) பின்புதான் கடன் வழங்க கட்டிடச் சங்கங்கள் நடவடிக்கை எடுப்பதால், நடுத்தர மக்கள் பெரும் அவதிக்குள்ளாவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நிபந்தனையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கூட்டுறவு கட்டிடச் சங்கங்கள் மூலமாக வீடு கட்ட கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்புதான் கட்டிடம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படுகிறது. கடன் தவணைதான் அடித்தளம் போட்ட பிறகு வழங்கப்படுகிறது.